# பத்திரிக்கை செய்தி

கன்னியாகுமரி மாவட்டத்தில் மழை பொய்த்ததின் காரணமாக ஏற்பட்டுள்ள வறட்சி நிலையை சமாளிக்கும் பொருட்டு மாவட்ட நிர்வாகம் மேற்கொண்டு வரும் பின்வரும் நடவடிக்கைகளில் பொதுமக்கள் ஒத்துழைப்பு தரும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது.

1. ஊரக பகுதிகளில் குடிநீர் விநியோகம் செய்யப்படும் நேரங்களில் குடிநீர் குழாய்களில் உடைப்பு மற்றும் குடிநீர் நல்லிகள் மற்றும் நீர்த்தேக்கத்தொட்டிகளின் வால்வுகளில் நீர்க்கசிவின் காரணமாக குடிநீர் வீணாவதைக் கண்டாலும் கிராமங்களில் பல நாட்களாக குடிநீர் விநியோகம் செய்யப்படாமலிருந்தாலும், ஊரக பகுதிகளில் அந்த அந்த வட்டார வளர்ச்சி அலுவலகத்திலும், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலும் இதற்காக உருவாக்கப்பட்டுள்ள கண்காணிப்பு மையங்களில் பொது மக்கள் புகார்களை தெரிவிக்கலாம்.

2. மேலும் தெருக்களிலுள்ள பொது நல்லியிலிருந்து தோட்டங்களுக்கு நீர்ப்பாய்ச்சுதல், வாகனங்கள் கழுவுதல் மற்றும் ரப்பர் குழாய்கள் பொருத்தி வீடுகளுக்கு தண்ணீர் எடுத்தல் ஆகிய செயல்கள் தடை செய்யப்பட்டுள்ளன.

3. வீட்டு இணைப்பு குடிநீர்க் குழாய்களிலிருந்து பெரிய நீர்த்தேக்கத்தொட்டியில் பிடித்து குடிநீரை பல நாட்கள் பயன்பாட்டுக்கு சேமிக்காமல் தேவைக்கு மட்டும் எடுத்து பயன்படுத்துமாறும், பொது சிறு மின்விசை தொட்டியில் (சின்டெக்ஸ்லிருந்து) கால்நடைகளைக் குளிப்பாட்டுதல், வாகனங்களைக் கழுவுதல் போன்றவற்றை தவிர்க்குமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

4. மின் மோட்டார்கள் பயன்படுத்தி வீட்டு இணைப்புகளிலிருந்து சட்ட விரோதமாககுடிநீரை உறிஞ்சி எடுப்பது கண்டுபிடிக்கப்பட்டால் மோட்டார்கள் பறிமுதல் செய்யப்படுவதுடன் கடும் அபராதம் விதிக்கப்பட்டு இணைப்பும் துண்டிக்கப்படும்.

5. ஆறுகள், குளங்கள் போன்ற நீர்நிலைகளில் தனியார் தொழிற்சாலைகளின் கழிவுநீரை விடுவது முற்றிலும் தடை செய்யப்பட்டுள்ளது. தனியார் நிறுவனங்கள் தமது ஆலைக் கழிவு நீரைத்தம் ஆலை வளாகங்களுக்குள்ளேயோ அல்லது கழிவு நீரோடைகளில் மட்டுமே வெளிவிடவேண்டும்.

## குடிநீர் புகார்கள் தொடர்பான கண்காணிப்பு மையங்கள்

| | | |
|---|---|---|
| 1 | மாவட்ட கண்காணிப்பு மையம்<br>மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை<br>மாவட்ட ஆட்சியர் அலுவலகம்<br>நாகர்கோவில் | 18002450363<br>(இலவச அழைப்புகள்) |

## வட்டார வளர்ச்சி அலுவலக் கண்காணிப்பு மையங்கள்

| | | |
|---|---|---|
| 1 | அகஸ்தீஸ்வரம் | 04652 - 270123 |
| 2 | தோவாளை | 04652 - 282009 |
| 3 | இராஜாக்கமங்கலம் | 04652 - 251004 |
| 4 | குருந்தன்கோடு | 04651 - 238585 |
| 5 | தக்கலை | 04651 - 248743 |
| 6 | திருவட்டார் | 04651 - 282550 |
| 7 | கிள்ளியூர் | 04651 - 235238 |
| 8 | முஞ்சிறை | 04651 - 235228 |
| 9 | மேல்புறம் | 04651 - 263499 |

எனவே அனைத்து பொதுமக்களும் மேலே தெரிவிக்கப்பட்டுள்ள நடைமுறைகளைப் பின்பற்றி வறட்சிக்காலத்தில் அனைவரின் குடிநீர்த் தேவையை நிறைவு செய்ய மாவட்ட நிர்வாகத்திற்கு ஒத்துழைப்பு தருமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**மாவட்ட ஆட்சியர்**
**கன்னியாகுமரி மாவட்டம்**

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.